## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 7. ஸ்ரீமதி.ராமா பாய் அம்மையார்

---

இக்காலத்திலும் எக்காலத்திலும் குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் யாராவது ஒருவரால் ஒரு ப்ரச்சனை ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றது. குறிப்பாக ஒரு குடும்பத்தில் தம்பதிகளுக்கு இடையில் ஒற்றுமையும் சுமூஹமும் இல்லை என்றால் குடும்பல் சீரழியும்.

சமீபகாலத்தில் பெண்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்று உள்ளனர்.ஆனால் படிப்பும் பட்டமும் பொருளும் பெண்களுக்குப் பல ப்ரச்சனைகளைத் தீர்க்க உதவவில்லை என்பதே உண்மை. லௌகீக சுகம் தேடுவதில் வெற்றி பெறுகிறார்கள், ஆனால் ஆன்மீக முன்னேற்றம் குறைந்து வருகின்றது.ஆன்மீகம் என்பது கண்மூடித் தனமான பக்தியோ மதமோ இல்லை.

இன்று பொறுப்புணர்வும் பொறுமையும் சகிப்புத் தன்மையும் விட்டுக்கொடுக்கும் மனமும் த்யாக மனப்பான்மையும் வெகுவாகக் குறைந்து வருகின்றன.

வெறும் பொருளை அடிப்படையாகக் கொண்டே திருமணங்கள் நிச்சயிக்கப் படுகின்றன.கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்வதும், மிகச் சிறிய விஷயத்துக்கும் மண வாழ்வை முடித்துக் கொள்வதும், தற்கொலை செய்வதும் அரிகரிப்பதைக் காண்கிறோம்.

ஒரு பெண் தான் குடும்பத்தில் மூலாதார பலம் என்று வேதங்கள் முதல் வள்ளுவர் வரை, இன்றைய மஹாகவி பாரதியார் வரை உண்மையை எடுத்துக் கூறி இருக்கிறார்கள்.காரணம் பெண்களுக்கு உள்ள பொறுப்புணர்வும் பொறுமையும் ஆகும். ஆண் மகன் எவ்வளவு சீர் கெட்டவனாக இருந்தும் குடும்பத்தை தலை நிமிரச் செய்த பெண்கள் நம் தேசத்தில் அதிகம்.இன்றும் இருக்கிறார்கள், ஒரே வித்யாசம், இன்று தனித்து நின்று வாழ்க்கையில் போராடுகிறார்கள்.

ஒரு சின்ன மாற்றம் இக்காலப் பெண்களும் ஆண்களும் செய்ய வேண்டி இருக்கின்றது. குடும்ப வாழ்வில் சீரழிவு வரும் சமயத்தில் ஒருவரை ஒருவர் பொறுமையுடன் மாற்றிக் கொள்ள முயலுங்கள்! நாம் மாற அடுத்தவர் மாறுவர்.இது மிகப் பெரிய உண்மை.முதலில் ப்ரச்சனையை ஏற்றுக் கொள்க.அதன் பின் உணர்ச்சிக்கு ஆளாகமல் அப்ப்ரச்சனையைத் தீர்க்க ஞானத்தைக் கையாளுக.அதற்கு விழிப்புணவு வேண்டி பக்தி செய்க.இறையருளின் துணையுடன் வீட்டில் உள்ள குழப்பத்தைத் தீர்த்து அமைதியை நிலை நாட்டும் பெண்களும்

ஆண்களும் அதிகரிக்க வேண்டும்.அதற்கு ஒரு sample study தான் ஸ்ரீமதி.ராமா பாய் அம்மையார். இவரது வாழ்க்கை இக்காலப் பெண்களுக்கும் குறிப்பாகப் பெற்றோர்களுக்கு ஒரு பாடம்!

**காசியின் யுவராணி**

ராமா பாய் காசியை ஆண்ட ஸ்ரீசந்தன் ராஜாவின் ஒரே மகள். மிகவும் அழகியவள்,கல்வியும் குணுமும் இசைக் கலையும் கைவரப் பெற்றவர்.பூர்வ ஜென்ம புண்ணியத்தால் காசி மாநகரில் வாழும் பேறும் அதற்கேற்ற பக்தியும் ஆன்மீகப் பயிற்சியும் வாய்க்கப் பெற்றவர்.

**அக்காலத்திலும் இக்கால அப்பா**

தன் ஒரே மகளுக்கு மிகச் சிறந்த வீரனைக் கல்யாணம் செய்ய ஆசைப்பட்டார்.ஆனால் ஆணுக்கு உரிய ஒழுக்கம் ஆன்மீகம் இவை எல்லாம் அவரது கண்களில் முன்நிற்கவில்லை.அதற்கேற்ப ஒரு வீர இளவரசன் இவருக்கு மருமகன் ஆனான்.

கல்யாணம் ஆன சில காலத்திலேயே ராமா பாய் கணவனது ஒழுக்கம் இல்லாத வாழ்க்கையை அடையாளம் கண்டாள். முதலில் வருந்துகிறாள். உடனே தன் அப்பாவிடம் இக்காலப் பெண்கள் போல் ஓடி வரவில்லை.

**தூய சரணாகதி**

தனக்குக் கிடைத்த கணவன் தன் பூர்வ ஜென்ம சங்கல்பத்தில் பலனே என்று உணர்ந்தாள். தான் செய்த புண்ணியத்தின் கணக்கீட்டைக் கொண்டே அவனது குணம் இருப்பதை உணர்ந்தாள். அடுத்தபடியாக, அவனது தீய வாசனைகள் தன் மூலம் திருந்த ஏன் தான் ஒரு தாயாக இருக்கக் கூடாது என்று விழிப்புணர்வு கொண்டாள்.

ஸ்ரத்தையுடன் அவள் அன்பைக் காட்டி அவ்வப்போது அவனது மனதுக்கு ஹிதமாக அறிவுரை கூறுவாள். இடையில் அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறக்கிறது.குழந்தை பிறந்த பின் அவன் வீட்டில் சற்று அதிகம் தங்கும் காலம் ஏற்பட அதை ராமா பாய் அன்புக்கும் பரிவுக்கும் பாடத்துக்கும் பயன் படுத்துகிறாள்.ஆனால் அவனது மாற்றங்கள் கவனில் கூட ஏற்படவில்லை.

**ஆடி மாத ஏகாதசி**

அன்று ஆடி ஏகாதசி.காசியில் ஜனங்கள் வ்ரதம் இருப்பதும் பலர் பண்டரிபுரம் செல்வதுமாக ஒரே கோலாகலமாக இருக்கும் நாள். ராமா பாய் எப்போதும் போல

தன் வ்ரதத்தை ஆரம்பித்து இறை சிந்தனையுடன் சதா தன் கடமைகளில் ஈடுபடுகிறாள்.

அப்போது அவள் கணவன் தன் தோழர்களுக்கு மதுவும் மாமிசமும் சேர்த்த விருந்து வைக்க ஏற்பாடு செய்ய முற்பட்டதை எண்ணிக் கலங்கினாள்.அஹிம்சைக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத அவனுக்கு அறிவுரை கூறுவதில் பலன் இல்லை என்று உணர்ந்த ராமா பாய் அமைதியாகக் இருந்தாள். ஒரு ஆடு வெட்டப்பட்டு சமையல் அறைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது.

அப்போது கணவன் அங்கே அவளிடம், "ராமா! விரைவில் விருந்துக்கு ஏற்பாடு செய்க. வெளியூர் நண்பர்கள் நம் வீட்டு உணவை வெகுவாக ருசிப்பது வழக்கம்! சரியா?! என்ன குழந்தையின் சத்தத்தையே காணோமே? தூங்குகிறதா?"

ராமா பாய் அமைதியாக இருந்தாள், அவள் கண்களில் கண்ணீர் வழிகிறது.அதைப் பார்த்த அவள் கணவன் அதட்டியபடி, "என்ன? எதற்காக இந்த அழுகை? ஏன் தினமும் ப்ரச்சனைகள் செய்கிறாய்?"

ராமா பாய், ***"இல்லை! ஆட்டின் இடத்தில் நம் குழந்தையை வைத்துப் பார்த்தேன். உங்களைப் போல யாராவது காபாலிகள் அகோரிகள் கையில் குழந்தை கிடைத்து அதை நரபலி தர நேர்ந்தால்?! ஐயோ!!! நினைக்கவே பயமாக இருக்கிறதே!"*** என்று அமைதியாகத் தன் மனக்கருத்தை வெளிப்படுத்தினாள்.தான் செய்வது சொல்வது அனைத்தும் ப்ரஹ்மத்தின் வெளிப்பாடே என்ற மிக்க விழிப்புணர்வில் இருந்து ராமா பாய் வாழ்கிறாள் என்பதைக் கருத்தில் கொள்க.

அவ்வார்த்தைகள் அவனுக்குள் ஒரு சிந்தனையைத் தூண்டின. ஒரு முறை சடாரெனக் குழந்தையின் தொட்டில் அருகில் சென்று குழந்தையின் முகத்தைக் காண்கிறான், அதே சமயம் குழந்தைக்கு வலிப்பு ஏற்பட்டுத் துடிக்க ஆரம்பித்தவுடன், அப்பாவான அவன் அன்பும் பாசமும் அவனைப் பதற வைக்கிறது, துடிக்க வைக்கிறது!

"ஐயோ! ராமா பாய்க குழந்தை தவிக்கிறாளே! அரண்மனை வைத்தியரை உடனே வரச்சொல்!" என்று கத்துகிறான்.

**பக்குவமான பத்தினி**

ராமா பாய் அமைதியாக, ***"அன்பரே! குழந்தைக்கு வைத்தியம் சீர் செய்யாது. பல***

***கொடிய வதைகளைச் செய்த வினை வலிப்பாக அவளை வாட்டுகிறது.இதற்கு ஒரே மருந்து தாங்கள் மனம் மாற்றம் பெற வேண்டும்.பாவ காரியங்கள் செய்யும் அறியாமையை ஆன்மீகம் மூலம் ஒதுக்க முற்படுங்கள்! அதுவே குழந்தைக்கு மாமருந்து!"*** - ஆஹா எத்தனை பக்குவம் பெற்ற அன்னை!?

தன் மனைவியின் வார்த்தைகளை உடனே புரிந்து கொண்ட அவன் பாசத்தால் அன்பால் கட்டப்பட்டு மனம் மாற முன்வருகிறான்.மெதுவாக மெதுவாகத் தன்னை மாற்றினான்.ராமா பாய் நிகழ்வது அனைத்தும் இறைச்செயல் என்பதால் கலங்கவே இல்லை.தூய ஏகாதசி துளசித் தீர்த்த ப்ரசாதத்தைக் குழந்தைக்கு ஊட்டி அதைக் காப்பாற்றினாள்.

பல காலம் திவ்யத் தம்பதிகளாய் இவர்கள் தேசத்தை ஆட்சி செய்து ஆன்மீக எழுச்சியும் செய்து இறையடி சேர்ந்தனர்.

ஒருவர் தன்னை மாற்றிக் கொள்ளும் சமயத்தை இயற்கை ஒவ்வொரு நொடியும் தந்து கொண்டே தான் இருக்கின்றது.அதை நாம் உணர்ந்து அதைப் பயன்படுத்த வேண்டும்.அதற்குக் குடும்பமும் சமூஹமும் துணை செய்தல் அவசியம்.

ராமா பாய் போல் இக்காலத்தில் தம்பதிகள் தங்களைப் பொறுமை கலந்த அன்பால் மாற்றிக் கொண்டால் குடும்பம் மிகவும் செழிப்பாகும்!

ஹரி ஓம்!